பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 16] சென்னை : மார்கழி 4 (18—12—68) புதன் ★ வெளியூர் : மார்கழி 5 (19—12—68) வியாழன் [இதழ் : 153

இராமேசுவரத்தில் எண்ணெய் ஊற்று ?

மதுரை, டிச. 18—

"இராமேசுவரம் தீவில் எண்ணெய் ஊற்றுக்கள் கண்டுபுடிப்பதற்காகக் கிணறுகள் தோண்டும் வேலை அடுத்த பிப்ரவரியில் தொடங்கும் என்று மாவட்ட கலெக்டர் எச்.பி என். ஷெட்டி நிருபர்களிடம் தெரிவித்தார்.

"இராமேசுவரம் கோவிலிலிருந்து 3 பர்லாங் தொலைவிலுள்ள தனியாருக்குச் சொந்தமான 3.5 ஏக்கர் நிலம் இதற்காக கைவசப்படுத்தப்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

செய்த முடிவில் மாறுதல் இராதாம்

டில்லி சென்றதும் கே. கே. ஷாவின் குரல் மாறுகிறது!

நாடாளுமன்ற மேலவையில் கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் கடும் கண்டனம்

புதுடில்லி, டிச. 17—

"அனைத்திந்திய வானொலியில், இந்திச் செய்தி அறிக்கைக்கு முதலிடம் கொடுத்தது கொடுத்ததுதான் -- அதை மாற்ற முடியாது" என்ற தோரணையில் நாடாளுமன்ற மேலவையில், ஆணவத்துடன் பதிலளித்திருக்கிறார், செய்தி -- ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. கே. கே. ஷா!

'ஆகாஷ்வாணி'யை, 'வானொலி' என்று மாற்றுமாறு தமிழகத்தினர் கோரியதையடுத்த வடக்கத்தியர் இந்த மாற்றத்தைக் கோரியதாகவும், அந்தக் கோரிக்கையையும் ஏற்க வேண்டிவந்தது என்றும், அமைச்சர் ஷா வாதம் புரிந்தார்.

ஆனால், வடக்கேயுள்ள மக்களிடமிருந்து இந்த மாற்றம் கோரி எவ்விதக் கோரிக்கையும் வரவில்லை என்றும், அரசே எதேச்சாதிகாரமாக இந்த மாற்றத்தைச் செய்துள்ளது என்றும் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தமிழ்நாட்டு ஆங்கில நாளிதழ்களான 'இந்து', 'மெயில்' ஆகியவற்றில் ஆசிரியருக்கு எழுதியதாக வெளியாகியிள்ள இரு கடிதங்களைத் தமக்கு ஆதரவாக அமைச்சர் எடுத்து வைத்துக்கொண்டு, 'வானொலியில் இந்தி நேர மாற்றத்தைத் தமிழ்நாட்டு மக்கள் உண்மையில் எதிர்க்கவில்லை' என்று வாதிட்டார்.

உடன் கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் அமைச்சர் கூற்றை மறுத்துப் பேசியதாவது :—

"பத்திரிகையில் வந்த ஒரு கடிதத்தையும், ஒரு கட்டுரையையும் வைத்துக்கொண்டு, 'மக்கள் கருத்து இதுதான்' என்று அமைச்சர் வாதாட முற்பட்டிருப்பது கண்டு வருந்துகிறேன்.

"தமிழ்நாட்டு மக்களின் கருத்து 1967-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலின்போதே சனநாயக முறையில் தெரிவிக்கப்பட்டுவிட்டது. தமிழ் மக்கள் இந்திக்கு ஆதரவளிக்கவில்லை என்பதும், தமிழும் ஆங்கிலமும் தான் அவர்களுக்குத் தேவை என்பதும் தேர்தல் முடிவுகளின் மூலமே அறிவிக்கப்பட்டுவிட்டது.

மற்றும், பேசிய உறுப்பினர்கள், இந்திச் செய்தி ஒலிபரப்பும் நேர மாறுதல் தேவையற்றது என்றும், கோரிக்கை இல்லாமலே திணிக்கப்பட்டது என்றும், 'எரிச்சலூட்டக்கூடிய முயற்சி' என்றும் கூறினர்.

ஆனால், இவற்றிற்கெல்லாம் அமைச்சர் அளித்த பதில், 'இனி இந்தப் பிரச்சினையை அரசு மறு ஆய்வு செய்யப் போவதில்லை' என்பதாகவே இருந்தது.

"இந்திச் செய்தி ஒலிபரப்பும் நேரத்தை மாற்றவேண்டும் என்று 1968 சனவரிக்கு முன்னரே கோரிக்கை வந்தது; ஆனால் அதனைப் பரிசீலனை செய்து செயல்படுத்த ஓராண்டு பிடித்தது" என்று அமைச்சர் ஷா கூறினார்; 'இந்த நேர மாறுதல், கோரிக்கை அடிப்படையிலும், அரசியல் சட்ட உணர்வோடும்தான் செய்யப்பட்டுள்ளது' என்றார்.

இந்திச் செய்தி ஒலிபரப்பு நேர மாறுதல் குறித்த இந்தி பேசாத மாநிலங்களில் ஏற்பட்டுள்ள விளைவு என்ன என்பதற்கு திரு ஷா பதிலளிக்க மறுத்தார்.

"தமிழக அரசு இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையா?" என்று தில்லைவில்லாளன் கேட்டதற்கும் அமைச்சர் பதிலளிக்க மறுத்தார்.

"ரம்சான் பண்டிகையின்போது வானொலியில் சில நிகழ்ச்சிகள் ஒலிபரப்பும் நேரங்களை மாற்றவேண்டும் என்று திருச்சியிலிருந்து முஸ்லிம்கள் சார்பில் கோரப்பட்டது; ஆனால் அந்தக் கோரிக்கையை ஏற்க மறுக்கப்பட்டுவிட்டது; ஆனால், இந்திச் செய்தி ஒலிபரப்பும் நேரத்தை மாற்றுவதில் மட்டும் எதேச்சாதிகாரமாக முடிவு செய்யப்பட்டுள்ளது" என்றார் தில்லை வில்லாளன்.

இதற்கு அமைச்சர், 'என்ன செய்யவேண்டுமோ அது செய்யப்படும்' என்று பதிலளித்தார்.

இந்திச் செய்தி அறிக்கை நேர மாறுதலுக்குத் தமிழகத்தில் எதிர்ப்பு ஏற்பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டிய ஏ. டி. மணி (உ. பி. மாநிலத்தைச் சேர்ந்த சுயேச்சை உறுப்பினர்) 'குறைந்தபட்சம், தமிழ்நாட்டைப் பொறுத்த அளவிலாவது இந்தக் குளறுபடியைத் தவிர்த்திருக்கலாம்; என்றார்; 'இரண்டு இந்திச் செய்தி அறிக்கைகளை ஏன் கட்டாயமாகத் தமிழகத்துக்கு அஞ்சல் செய்யவேண்டும்' என்று வினவினார்; அனைத்திந்திய வானொலி, ஒரு கருத்தாய்வு நடத்தியது; அப்போது, காலை 8-மணிக்கு இந்திச் செய்தி ஒலிபரப்ப வேண்டும் என்று இந்திக்காரர்களிடமிருந்து ஏதேனும் கோரிக்கை எழுந்ததா?' என்றும் அவர் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், 'இந்திக்குக் கொடுக்க வேண்டிய சம இடத்தை மறுக்க முடியாது' என்றார்; இந்திக்குத் தாம் இந்தச் சமத்துவம் கொடுத்ததற்காக அனைவரும் தம்மைப் பாராட்டுவார்கள் என்று நம்புவதாகவும் கூறினார். 'இந்திக்கு முன்பே தமிழ்ச் செய்தி ஒலிபரப்பப்படுகிறது. இதைக் கொண்டு ஏன் நீங்கள் திருப்தியடையக் கூடாது?' என்று அவர் கேட்டார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரசு உறுப்பினரான ஆர். டி. பார்த்தசாரதி, இந்திச் செய்தி நேர மாறுதல் பற்றிய அறிவிப்பு வெளியான காலத்தைக் குறிப்பிட்டு, 'பொதுவாக நவம்பர் மாதத்தில்தான் மாணவர்கள் போராட்டம் துவங்கும்; இப்போதும், அதே நிலை ஏற்பட்டு தமிழகத்தில் கல்லூரிகள் மூடப்பட்டுவிட்டன; இது, இந்திய அரசு தமிழக மக்களுக்கு அளிக்கும் பங்கா?' என்று கேட்டார்.

கவனஈர்ப்புத் தீர்மானத்தின் மீதான கேள்விகள் முடிவதற்கு 25 நிமிட நேரமாயிற்று; ஏ டி. மணியும் மற்றவர்களும் கொணர்ந்த கவனஈர்ப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் பதிலளித்துக் கொண்டிருக்கையில், தென்னக உறுப்பினர்களும், சுதந்தரா கட்சி லோகநாத மிஸ்ராவும்,

"இந்த மாறுதல் அனாவசியமானது; தென்னக மக்களுக்கு எரிச்சலை உண்டு பண்ணுவது"

என்று புகார் கூறினர்; 'இந்தப் புகாரை நான் ஏற்றுக்கொள்ள முடியாது' என்று அமைச்சர் கே. கே. ஷா கூறினார்; 'செய்தி அறிக்கைகளை ஒலிபரப்புவது சம்பந்தமான வானொலியின் ஏற்பாடுகள் நியாயமானவை --- சமத்துவமானவை' என்று சப்பைக்கட்டு கட்டினார்; 'நாட்டில் பல்வேறு கருத்துக்கள் நிலவும்போது, நியாயமாகவும் நேர்மையாகவும் இருப்பது ஒன்றுதான் அளவு கோலாகும்' என மழுப்பினார்.

என். ஆர். முனுசாமி :—"மத்திய அரசுக்கும்-தமிழக அரசுக்கும் இடையே இப்போது உறவு முறை சுமூகமாக இருக்கிறது; தமிழக அரசின் கருத்துக்கு இணங்குவதால் மத்திய அரசுக்கு நட்டம் எதுவும் ஏற்பட்டு விடப் போவதில்லை.

"தமிழ்நாட்டு மக்கள் சாதாரணமாக உணர்ச்சிவயப்படுபவர்களல்லர்; ஆனால் மொழிப் பிரச்சினை சம்பந்தப்பட்டவரை

(4-ம் பக்கம் பார்க்க)

புதுவையில் காங்கிரசுக்குக் கல்லறை

கழகக் கூட்டணி பெற்ற மகத்தான வெற்றி

தலைநகர் உள்ளிட்ட முக்கிய நகராட்சிகளெல்லாம் கூட்டணி வசம்

புதுவை, டிச. 18—

நாட்டு மக்கள் எதிர்பார்த்தபடியே புதுவையிலும் காங்கிரசுக் கட்சிக்குக் கல்லறை கட்டப்பட்டுவிட்டது!

நடந்து முடிந்த நகராட்சிமன்றங்களின் தேர்தலில் காங்கிரசுக் கட்சி பரிதாபகரமாக முறியடிக்கப்பட்டு, கழகக் கூட்டணி மகத்தான வெற்றி வாகை சூடியிருக்கிறது!

அடுத்து நடைபெறவிருக்கும், புதுவை மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் முடிவு என்னவாக இருக்கும் என்பதற்கு முன் அறிகுறியாக இந்தத் தேர்தல் முடிவுகள் அமைந்துள்ளன.

'இப்போது காற்று காங்கிரசுப் பக்கம் வீசத் தொடங்கியிருக்கிறது' என்று தப்புக் கணக்குப் போட்ட காங்கிரசுப் பெருந்தலைகளின் மனக்கோட்டையைச் சுக்குநூறுக்கியிருக்கிறது புதுவை நகராட்சித் தேர்தல் முடிவு!

'கழகத்திற்கு ஒரு இடம்கூட இல்லை' என்ற நிலையில், காங்கிரசுக் கோட்டையாக இருந்த புதுவை மாநிலத்தில், இன்று கழகம் கொடி கட்டிப் பறக்கும் உன்னத நிலை ஏற்பட்டிருக்கிறது!

புதுவை வரலாற்றில் காங்கிரசு அத்தியாயம் முடிந்து கழக அத்தியாயம் துவங்கிவிட்டது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் கம்யூனிஸ்டு கட்சி, முஸ்லீம் லீக், உழைப்பாளர் கட்சி ஆகியவை சேர்ந்து அமைத்த கூட்டணி, பெரும்பாலான இடங்களில் காங்கிரசை முறியடித்து வெற்றிக் கொடி நாட்டியுள்ளது.

கழகம் பரவாத மாகி--ஏனும் பகுதியில்கூட கழகக் கூட்டணிக்கு வெற்றி கிட்டியுள்ளது.

பழம்பெரும் கழகத் தோழர்களான புதுவை பெருமாள், கவிஞர் சிவப்பிரகாசம் (புதுவை சிவம்) ஆகியோரும், முன்னாள் புதுவை முதல்வரும் தற்போதைய கழகத் தோழருமான ஈ. குபேரும் வெற்றி பெற்றுள்ளனர்.

மற்றும் கழக முக்கிய தோழர்களெல்லாம் வென்றிருக்கின்றனர்!

பெரிய பெரிய காங்கிரசுக்காரர்களெல்லாம் முகாமிட்டுப் புதுவையில் தேர்தல் பிரசாரம் செய்தும், தேர்தல் பணிகள் புரிந்தும், தோல்வியையே அணைத்துக் கொண்டிருக்கின்றனர்!

புதுவை மாநிலத் தலைநகரான பாண்டிச்சேரி நகராட்சியில் உள்ள 18 இடங்களில் 17 இடங்களைக் கழகக் கூட்டணி பிடித்துள்ளது; காங்கிரசுக்கு ஒரே இடம்தான் கிடைத்தது!

பாண்டிச்சேரிக்கு அடுத்த பெரிய நகராட்சியான காரைக்காலிலும் 14 இடங்களில் 12 இடங்களைக் கழகக் கூட்டணி பெற்றிருக்கிறது!

முதலியார்பேட்டை நகராட்சியில் ஒரு இடம்கூடக் காங்கிரசுக்குக் கிடைக்கவில்லை; 12 இடங்களையும் கழகக் கூட்டணி கைப்பற்றியுள்ளது.

ஒன்பது நகராட்சிகளை கழகக் கூட்டணி கைப்பற்றியுள்ளது.

மற்றும் மூன்று நகராட்சிகளில் கூட்டணிக்கும், காங்கிரசுக்கும் சம இடங்கள் கிடைத்துள்ளன.

நான்கே நகராட்சிகளை மட்டுமே காங்கிரசு கைப்பற்ற முடிந்திருக்கிறது!

முன்னாள் காங்கிரசு அமைச்சர் ஒருவரும், முன்னாள் மேயர் ஒருவரும் கூட்டணி வேட்பாளர்களிடம் தோற்றிருக்கின்றனர்!

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 மார்கழி 4 (18-12-68) புதன்

தமிழர்களின் ஒருமித்த கோரிக்கை

இந்தித் திணிப்பு முயற்சியில் வெளிப்படையாக இந்திய அரசு ஈடுபடுகின்ற ஒவ்வொரு நேரத்திலும், அத்திணிப்பை எதிர்க்கின்ற உணர்வு தமிழ் மக்களிடம் கிளர்ந்தெழுந்து, புயலென வீசத் தொடங்குகிறது. வெளிப்படையாக மேற்கொள்ளக்கூடிய திணிப்பு முயற்சியை இந்திய அரசு தளர்த்திக் கொள்ளுகின்றபொழுது, தமிழக மக்களின் எதிர்ப்பு உணர்ச்சியும் தணிந்துவிடுகிறது. ஆனால், 'இந்தி மொழியை எப்படியாவது திணித்தே ஆகவேண்டும்' என்ற பிடிவாதத்தை விட்டுவிட இந்திய அரசு விரும்பவில்லை. இந்திய அரசின் இந்த மனப்போக்கைத் தெளிவாகத் தெரிந்திருக்கின்ற காரணத்தால், தமிழ் மக்களும் இந்தித் திணிப்பை எதிர்த்து நிற்கின்ற தங்கள் மன உறுதியைத் தளர்த்திக் கொள்ளாது உள்ளனர்.

எதிர்ப்பு எத்தகைய கடுமையானதாகவும், உறுதி வாய்ந்ததாகவும் இருந்திட்டாலும், 'இந்தி மொழியைத் திணித்தே தீருவது' என்ற தனது முடிவை இந்திய அரசு செயலாற்றுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துவருகிறது. 'அரசு' என்ற மொத்த நிலையிலிருந்தும், 'தனித்தனி அமைச்சுத்துறை' என்ற நிலையிலிருந்தும், இந்த இந்தி மொழித் திணிப்பு, அவ்வப்பொழுது நிகழ்ந்துகொண்டிருக்கிறது. அவ்வாறு மேற்கொள்ளக்கூடிய இந்தித் திணிப்பின் மூலமாக இந்தி வளர்ச்சிக்குப் பெரும் பலன் கிடைத்திடவில்லை; என்றாலும், கடுகளவு பலன் கிடைத்திட்டாலும், 'கிடைத்த வரையில் இலாபம்' என்ற முடிவில், இந்தியைத் திணிப்பதில் இந்திய அரசு முனைந்துள்ளது.

இதற்கு எடுத்துக்காட்டாக, சில நாளைக்குமுன் வானொலியில் காலை எட்டு மணிக்கு ஆங்கில மொழியின் வாயிலாக ஒலிபரப்பப்பட்டுவந்த செய்தியை மாற்றி அமைதது, அந்த நேரத்தை இந்தி மொழி மூலம் செய்தியை ஒலிபரப்புவதற்கு ஏற்பாடு செய்யத் துணிந்திருக்கிறது இந்திய அரசின் வானொலி–செய்தித்துறை அமைச்சு! இது தேவைதானா? இந்த மாற்றம் அவசியம்தானா?

இந்த மாற்றத்துக்குத் தேவையோ, அவசியமோ ஏற்படவில்லை. 'எட்டு மணிக்கு ஆங்கிலத்தில் செய்தி தரப்படவேண்டாம்; இந்தி மொழியில்தான் செய்தி தரப்பட வேண்டும்' என, இந்திய செய்தித்துறை அமைச்சரைக் கோரிக்கொண்டவர்கள் ஒருவருமிலர். எவரும் விண்ணப்பித்துக்கொள்ளாத நிலையிலேயே, இம்மாற்றத்தை இந்திய அரசின் செய்தித்துறை அமைச்சு, தன்னிச்சையாக மேற்கொள்ள முனைந்திருக்கிறது.

'ஆங்கில மொழியின் இடத்தை இந்திக்குத் தேடித்தர வேண்டும்; ஆங்கில மொழியின் இடத்தில் இந்தி மொழியை அமர்த்திட வேண்டும்' என்ற ஒரே ஒரு நோக்கத்தைத் தவிர, செய்தித் துறை அமைச்சகம் மேற்கொண்டிருக்கின்ற இப்போக்கிற்கு நியாயமான காரணம் எதுவும் இருப்பதற்கில்லை. 'இம்மாற்றத்துக்கு நியாயமானதும் பொருத்தமானதுமான காரணம் இருக்கிறது' என, மேற்படி அமைச்சுத் துறையாலும் கூறமுடியாது.

வானொலி -- செய்தித் துறை அமைச்சகத்தின் தேவையில்லாத இம்மாற்றம் செய்தியாகத் தரப்பட்டவுடன், தமிழ்நாடு கல்வி அமைச்சர், 'இம்மாற்றம் தேவையற்றது' எனக் கருத்தறிவித்ததுடன், 'தமிழ் மக்களுக்கு எரிச்சலூட்டக்கூடியது' எனக் கோடிட்டுக் காட்டி 'இம்மாற்றத்தைச் செய்யக்கூடாது' என இந்திய அரசுக்கு அறிவிக்கவும் செய்தார்.

கல்வி அமைச்சர் அச்சம் தெரிவித்திருந்ததுபோன்றே, தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளிலுமுள்ள கல்லூரி மாணவர்களிடை, இம்மாற்றம் கொந்தளிப்பை உண்டாக்கிவிட்டது. ஆங்காங்கே உள்ள மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லாமல், இம்மாற்றத்தை எதிர்த்துக் கிளர்ச்சியில் ஈடுபடலாயினர். தமிழ்நாட்டில் மீண்டும் இந்தித் திணிப்பை எதிர்க்கின்ற சூழ்நிலை இப்பொழுது தலைதூக்கி நிற்கக் காண்கின்றோம்.

ஆங்கில மொழியில் செய்தி தரப்பட்டுவந்த நேரத்தை மாற்றியமைத்து, அதே நேரத்தில் இந்தி மொழியில் செய்தி தரப்படுவதெனச் செய்திருக்கின்ற முடிவு, 'அற்பமானது' -- 'மிகச் சாதாரணமானது' என இந்திய அரசின் செய்தித் துறை அமைச்சர் உண்மையிலேயே நினைப்பதாக இருக்கலாம்; அல்லது, 'அவ்வாறு தாம் நினைத்துக்கொண்டிருப்பதாக மற்றவர்கள் நம்பவேண்டும்' என அந்த அமைச்சர் ஆசைப்படுவதாகவும் இருக்கலாம். ஆனால், அந்த அமைச்சர் இந்த மாற்றத்தை எப்படி நினைத்துக்கொண்டிருப்பதாக இருந்திட்டாலும், அதே நினைப்பைத் தாங்களும் கொள்ளுவதற்கு இங்குள்ள தமிழ் மக்கள் --- அதிலும் குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் -- ஆயத்தமாக இல்லை என்பதை, அந்த அமைச்சர் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

இந்தித் திணிப்பை எதிர்க்கின்ற தங்கள்மீது இந்தியைத் திணிக்க இந்திய அரசு மேற்கொள்ள வரையறை செய்திருக்கின்ற திட்டத்தின் ஒரு கூறுதான், இந்தக் கால மாற்றம் எனத் தமிழக மக்கள் தீர்மானித்துக் கொண்டுள்ளனர்.

தமிழ்நாட்டுக்கு வந்திருந்த இந்திய அரசின் செய்தித் துறை அமைச்சர் அவர்களிடம், நமது முதலமைச்சர் அவர்கள், 'இம்மாற்றத்தைக் கைவிட வேண்டும்' என்பதை வலியுறுத்திக் கூறியிருக்கின்றார். இதே நேரத்தில், இதுபற்றித் தமிழக அரசு இந்திய அரசுக்கு எழுதியுள்ள கடிதத்தையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்திய அரசின் வானொலி -- செய்தித் துறை அமைச்சகம், செய்தி ஒலிபரப்பில் செய்ய முனைந்துள்ள இம்மாற்றத்தை, தமிழக அரசு மட்டுந்தான் கண்டிக்கிறது -- அதிருப்தி தெரிவித்திருக்கிறது என்பதில்லை; தமிழகச் சட்டப் பேரவையில் எதிர்க் கட்சித் தலைவராக உள்ள காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த கருத்திருமன் அவர்கள்கூட, இம்மாற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளார். இதையும்விட குறிப்பிடத்தக்கது, தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் அவர்களின் எதிர்ப்புமாகும்.

"எரிச்சலூட்டக்கூடிய இத்தகைய சிறிய விஷயங்கள்தான் மொழிப் பிரச்சினையை மேலும் சிக்கலானதாக ஆக்கிவிடுகிறது"

என சுப்பிரமணியம் அவர்கள் கூறியிருப்பதுடன், தமது கருத்தை வானொலி -- செய்தித்துறை அமைச்சரிடம் நேரடியாக அறிவித்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

இம்மாற்றத்தை, 'சிறிய விஷயம்' என சுப்பிரமணியம் அவர்கள் சுட்டிக் காட்டி இருந்தபோதிலும், இந்தச் சிறிய விஷயம் எத்தகைய விளைவை உருவாக்கக்கூடியது என்ற உண்மையை உணர்ந்தே உள்ளார்.

ஆனால், இம்மாற்றத்தால் ஏற்படக்கூடிய விளைவைத் தெளிவாகப் புரிந்துகொண்டு தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சுப்பிரமணியம் அவர்கள் கருத்தறிவித்திருப்பதற்கு முழுதும் முரணாக, அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா அவர்கள் இதுபற்றிக் கருத்தறிவித்திருக்கின்றார்.

"இந்த மாற்றத்தால் என்ன வந்துவிட்டது? இந்தப் பிரச்சினைமீது ஏன் கிளர்ச்சி என்பதை என்னால் தெரிந்துகொள்ளவே முடியவில்லை"

என்று, அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் அவர்கள், பிரச்சினையை மழுப்பியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரசுத் தலைவருக்குப் புரிந்திருப்பது, அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவருக்கும் புரியாதிருப்பது எப்படியோ இருக்கட்டும். காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த ஒருவர் புரிந்துகொண்டிருப்பது மற்றொருவருக்குப் புரியாமல் இருப்பது, இருவரும் தனித்தனியாக, வீற்றிருக்கின்ற இடத்தைப் பொறுத்ததாக இருக்கலாம்.

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவருக்கு விஷயம் புரியாமலே இருக்கட்டும்; ஆனால், பிரச்சினையிலிருக்கின்ற நச்சுத்தன்மையைத் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் புரிந்துகொண்டுள்ளார். தமிழக அரசு தெளிவாகத் தெரிந்துகொண்டிக்கிறது. தமிழ்நாடு அரசும், எதிர்க் கட்சியாக இருக்கின்ற காங்கிரசுக் கட்சித் தலைவரும், இமமாற்றத்தை விரும்பவில்லை -- எதிர்க்கின்றனர்; 'பழைய முறையே -- அதாவது, எப்பொழுதும்போல் காலை எட்டு மணிக்கே ஆங்கில மொழியில் செய்தி ஒலிபரப்பப்பட்டு வரவேண்டும்; இதில் மாற்றம செய்யக்கூடாது' என்பதில் தமிழக அரசும் -- எதிர்க் கட்சியான காங்கிரசுக் கட்சியும் ஒருமித்த கருத்துக்கொண்டுள்ளன; இந்திய அரசை வேண்டிக்கொண்டும் உள்ளன.

அரசியல் வேற்றுமையைக் கடந்து ஒருமித்த கோரிக்கை தமிழ்நாட்டிலிருந்து கிளம்பியிருப்பதற்கு மதிப்பளித்து, செய்தி ஒலிபரப்பில் முந்தைய முறையே இருந்துவர இந்திய அரசு ஏற்பாடு செய்யவேண்டும். இதுவே தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த கோரிக்கை என்பதை இந்திய அரசு செய்தித்துறை அமைச்சர் உணர்ந்துகொள்ளட்டும்.

—கா. க.

மூடப்பட்ட பஞ்சாலைகள்

தமிழக அரசின் கடிதத்துக்கு டெல்லியின் பதில் என்ன?

தில்லைவில்லாளன் கேள்வி--'விவரம் தெரிவிக்க இயலாது' என்கிறார் மத்திய அமைச்சர்

புதுடில்லி, டிச. 17—

"தமிழ்நாட்டில் மூடப்பட்டுள்ள 26 பஞ்சாலைகளையும் திறப்பது பற்றித் தமிழக அரசு தெரிவித்த யோசனைகளை, மத்திய அரசு ஏற்றுக்கொண்டதா?"

என்று நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் தில்லைவில்லாளன் கேட்டார்; வர்த்தக அமைச்சர் தினேஷ் சிங், அக்கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"தமிழக அரசின் கடிதத்திற்கு மத்திய அரசு விரைவில் பதில் அனுப்பும்; ஆனால், அதுபற்றிய விவரங்களை இங்கு தெரிவிக்க இயலாது."

உயர் நீதிமன்றத்துக்கு புதிய நீதிபதிகள்

திருச்சி, டிச. 16—

"சென்னை உயர் நீதிமன்றத்திற்குப் புதிய நீதிபதி ஒருவரும், கூடுதலாக இரண்டு நீதிபதிகளும் நியமனம் பெறவேண்டும்.

"இந்த மூன்று நியமனங்களுக்கான பெயர்ப் பட்டியல் மத்திய அரசுக்கு முன்பே அனுப்பப்பட்டுவிட்டன.

"கூடுதலான இரு நீதிபதிகளின் பதவிகளும் அனுமதிக்கப்பட்டு நீண்ட நாட்கள் ஆகிவிட்டன; நீதிபதிகளின் பெயர்களை விரைவில் மத்திய அரசு அறிவிக்கும்.

"கூடுதலான இரு நியமனங்களையும் சேர்த்து, உயர் நீதிமன்றத்தில் 16 நீதிபதிகள் இருப்பார்கள்."

—சட்ட அமைச்சர்

செ. மாதவன்

மறுதார மணத் தடை

மகளிருக்கும் கட்டுப்பாடு

புதுடில்லி, டிச. 17—

மத்திய அரசில் பணியாற்றும் மகளிருக்கும் இனி இரண்டாம் தரம் மணம் புரிந்துகொள்வதற்கு கட்டுப்பாடுகள் வரும்.

இதுவரையில் இந்தக் கட்டுப்பாடு ஆடவர்களுக்கு மட்டுமே பொருந்தும்படி இருந்து வந்தது.

மத்திய அரசில் பணியாற்றும் மகளிர், முதலில் திருமணம் செய்துகொண்ட கணவர் உயிரோடு இருக்கையில் இன்னொருவரைத் திருமணம் கொள்ளத் தடுக்கும் வகையில் தற்போது விதிகள் இல்லை; இந்தக் குறைபாட்டைக் களைய மத்திய சிவில் சர்வீசுகளின் விதிகளில் உள்ள 21-வது விதியைத் திருத்தியமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

ஆங்கிலப் பள்ளியில் இந்தி வெறியர்களின் பிள்ளைகள்!

'குட்டு' அம்பலமாகிறது!

புதுடில்லி, டிச. 17—

"'இந்தியே வேண்டும்' என்று நாடாளுமன்றத்திலும், பொதுக்கூட்டங்களிலும் உற்சாகமாகப் பேசுபவர்கள்கூட, தங்கள் குழந்தைகள் உலக அறிவியல்களை ஆங்கிலத்தின் மூலம்தான் பெற இயலும் என்பதை நன்கு உணர்ந்துவிட்டிருக்கின்றனர்.

"இடையறுமல் வளர்ந்துவரும் உலக அறிவியல்களை, அனைத்துலக மொழி ஒன்றின்மூலமே தங்கள் குழந்தைகள் தெரிந்து கொள்ள முடியும் என்பதை, இந்திப் பித்தர்கள்கூடத் தனித்து யோசிக்கையில் உணருகின்றனர்.

"ஆங்கிலம் கற்பிக்கும் 250 பள்ளிகள் உள்ளன; இந்தப் பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்ப்பதற்கு இடம் கேட்டும் 'கியூ' வரிசைகளின் முன்னணியில் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பேர்போன இந்தி வெறியர்களுமே காணப்படுகின்றனர்.

"என்னதான் குறைத்து மதிப்பிட்டாலும் 50-இலட்சம் மாணவர்கள் ஆங்கிலம் பயிலுகின்றனர்; இருந்தும் தேவை பெருகிக்கொண்டிருக்கிறதே தவிர குறையவில்லை."

--பிராங்க் அந்தோணி

அருவருப்புக் காட்சிகளுக்கு முற்றுப் புள்ளி

திரைப்படத் தணிக்கை கடுமையாகும்

சென்னை, டிச. 17—

இப்போதைவிட இன்னும் கடுமையாகத் திரைப்படங்களைத் தணிக்கை செய்வது என்று மத்திய திரைப்படத் தணிக்கை குழு முடிவு செய்துள்ளது.

"அருவருக்கும் காட்சிகள்-காதல் காட்சிகளில் நெருக்கமாக நடித்தல், இருபொருள் உள்ள பாடல்கள், உரையாடல்கள் ஆகியவை கடுமையான தணிக்கை விதிகளுக்குள்ளாகும்"

என்று குழுவின் உறுப்பினரான ஏ. எல். சீனிவாசன் கூறினார்.

இராணுவத் துறையில் ஊழல்

ஒருவர் வேலை நீக்கம்

புதுடில்லி, டிச. 17—

மேற்கு வங்காளத்தில் தரைப்படை சப்ளை பிரிவில் பணியாற்றி வந்த நாயக் வி. பட்டீல் என்பவர், தமது ஆண்டு வருமானத்திற்கும் அதிகமாகப் பணம் சம்பாதித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுத் தரைப்படையிலிருந்து வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்.

அவரது ஆண்டு வருமானம் ரூ. 2,800 ஆக இருந்துப் ஓராண்டில் சுமார் ரூ. 9,000 தமது வீட்டுக்கு அனுப்பியிருக்கிறார்,

ஆறுகால் பூசையைக் குறைக்கச்சொல்லவில்லை

ஆலயச் செலவுகள் முறையாக நடைபெற வேண்டும்

எஞ்சிய பணமே கல்வி--மருத்துவப்பணிகட்கு-- அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

மதுரை, டிச. 17—

மதுரை மீனுட்சி சுந்தரேசுவரர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கு ரூ. 2,15,000 செலவில் கட்டிடம் கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டிவைத்து, கல்வித்துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் பேசுகையில், 'ஆண்டவனிடம் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ--எங்களிடம் ஆண்டவனுக்கு நம்பிக்கை இருக்கிறது; அந்த அளவுக்கு நாங்கள் பணியாற்றிவருகிறோம்'' என்று குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:—

"இந்த இடத்தில் இதுவரையில் பூக்கள் வளர்ந்து வந்திருக்கின்றன; இனிமேல் இதில் பூவையர் வளருவர்!

கோவில்கள், சமூகப் பணிகளில் ஈடுபட வேண்டுமென்று கூறுகிறோம்--எப்பொழுது? கோவில்கள் முறைப்படி எது எது செய்யவேண்டுமோ அது அது செய்து முடித்தபிறகுதான்!

ஆறுகால பூஜையை நான்குகால பூசையாக ஆக்கி--2 கால பூசையை நிறுத்திவிட்டு--சமூகப் பணி செய்யச் சொல்லவில்லை; செய்யவேண்டியதைச் செய்துவிட்டுத்தான் மிச்சமிருப்பதைக் கொண்டு அறிவுப் பணியோ, மருத்துவப் பணியோ செய்யலாம்.

பல கல்வெட்டுக்களிலும் செப்பேடுகளிலும்கூட இத்தகைய பணிகள் செய்யும்படி குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆண்டவனிடம் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ — ஆண்டவனுக்கு எங்கள்மீது நம்பிக்கை இருக்கிறது! அந்த அளவுக்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம்!"

அதிக விளைச்சல் தரும் புதிய நெல் வகை

ஆடுதுறை ஆராய்ச்சிப் பண்ணையில் உருவாக்கம்

சென்னை, டிச. 18—

ஆடுதுறையிலுள்ள நெல் ஆராய்ச்சி நிலையத்தில் இப்போது நடந்துவரும் சோதனைகள் வெற்றி பெறுமாயின் தமிழகத்திற்குப் புதிய அற்புத நெல் வகை ஒன்று விரைவில் கிடைக்கும்.

"ஆடுதுறை-27 வகையையும் கோ. 25 வகையையும் வெற்றிகரமாகக் கலந்து முற்றிலும் புதிய கலப்பு நெல்லை உருவாக்கிவிடலாம்'' என்று அந்நிலையத்திலுள்ள விஞ்ஞானியர் நம்புகின்றனர்.

இப்புதிய நெல், மிகுந்த விளைச்சலைத் தருவதாகவும், நோயை எதிர்த்து நிற்சக்கூடியதாகவும் இருக்குமாம்.

இதற்கிடையே தமிழக வேளாண்மைத் துறையினர் தஞ்சை மாவட்டத்தில் இந்த 1968-69-ம் ஆண்டு 6 இலட்சம் ஏக்கரில், 'ஆடுதுறை-27' நெல்லைத் தீவிர விளைச்சல் திட்டத்தின் கீழ் இருபோக வேளாண்மை செய்யும் பெரிய திட்டத்தை வகுத்துள்ளனர். வேண்டிய விதைகளும், உரங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதற்கு ஆயத்தமாயிருக்கின்றன.

இந்த வகை நெல்லை வீராணம் ஏரிப்பாசனத்தைக்கொண்டு சிதம்பரத்தில் 26 ஆயிரம் ஏக்கரில் இருபோகம் செய்யவும் திட்டமிட்டுள்ளனர்.

தஞ்சாவூர் தீவிர விளைச்சல் திட்டம் 1961-ம் ஆண்டு தொடங்கியது; தொடக்கத்தில் 317 கிராமங்களில் பாசன வசதி பெற்று 2-இலட்சம் ஏக்கரில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது; இப்போது 2,096 கிராமங்களைச்சேர்ந்த சுமார் 13 இலட்சம் ஏக்கரில் இத்திட்டம் நடந்துவருகிறது.

இப்போது ஏக்கருக்கு சராசரியாக 3,500 கிலோ கண்டுமுதலாகிறது; அதாவது, ஏக்கருக்கு 1,800 கிலோ அதிகப்படியாக விளைகிறது.

நல்ல வகை நெல், போதிய உரம், பூச்சி மருந்து, திருந்திய வேளாண்மை புதிய உழு கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தியதால் இவ்வளவு கூடுதலாகக் கண்டுமுதலாகிறது.

தஞ்சாவூரில் நெல்லுடன் தக்காண மகசூச் சோளம் சுமார் 1,200 ஏக்கரிலும், 'சி. எச். எஸ்-1' என்ற சோளம் 275 ஏக்கரிலும் பயிராகின்றன.

வழக்குகள் தேங்கக் காரணம்?

புதுடில்லி, டிச. 16—

"நீதிமன்றங்கள் -- உயர் நீதிமன்றங்களில் ஏராளமான வழக்குகள் -- குறிப்பாக வரிச் சட்டங்கள் பற்றிய வழக்குகள் -- முடிவு செய்யப்படாமல் தேங்கிக் கிடப்பது ஏன்? --- போதிய சிந்தனையின்றியும், நல்ல முறையிலும் அல்லாமல் தயாரிக்கப்படும் சட்டங்களும் விதிகளும், கட்டுப்பாடுகளும் உத்தரவுகளும், சுற்றறிக்கைகளும் ஒன்றன் பின் ஒன்ருக வந்தவண்ணமிருப்பதே இந்தத் தேக்கத்திற்கு முக்கியமான காரணங்களாகும்''

என்று, தலைமை நீதிமன்ற நீதிபதி ஜே. ஷா கூறியுள்ளார்.

குறுக்கு வழியில் சேர்த்த பணமா?

வெளிநாட்டு பாங்கிகளில் இந்திய அதிகாரிகள் கணக்கு

'விசாரணை நடத்த இயலாது' என்கிருர் மொரார்ஜி!

புதுடில்லி, டிச. 17—

"இப்போது பதவியிலுள்ள அரசு அதிகாரிகளும், ஓய்வு பெற்ற அரசு அதிகாரிகளும், வெளிநாடுகளிலுள்ள பாங்கிகளில் வைத்திருக்கும் கணக்குகள் பற்றி விசாரணை நடத்த வேண்டும்''

என்ற யோசனையை, மக்களவையில், துணைத் தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் ஏற்க மறுத்தார். அவர் அதுபற்றிக் கூறியதாவது:—

"ஓய்வு பெற்ற அல்லது பதவியிலுள்ள 1,200 அதிகாரிகளின் பாங்கிக் கணக்குகளை ஆராய்வது இயலாததாகும்; தனிப்பட்ட எந்த அதிகாரியாவது தவருன முறையில் பணம் சமபாதித்ததாகக் குறிப்பிடப்படுமானல் விசாரணை செய்ய இயலும்; அப்படியே இருந்தாலும், சட்டபூர்வமான கணக்கிலா அந்தப் பணம் இருக்கும்?'

'போனல் போகட்டும்' என்கிருர் மொரார்ஜி

வெளிநாடு செல்லும் திறமைசாலிகள் பற்றி வீராப்பு!

கல்கத்தா, டிச. 17—

"திறமைசாலிகள் வெளியேறுவதால் இந்தியாவுக்கு ஒன்றும் நட்டமில்லை; யாராவது தங்களுடைய திறமையையும் வாழ்க்கையையும் வளர்ச்சியுறச் செய்துகொள்வதற்காக வெளிநாடுகளுக்குச் சென்ருல், எனக்கு அவர்களிடம் கோபம் கிடையாது; ஆனுல், ஒருவருடைய திறமை, நாட்டின் நலனுக்கே முதலில் அளிக்கப்பட வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

"அவர்கள் திரும்பி வந்தால் எனக்கு மகிழ்ச்சி; வராவிட்டால் வருத்தம் கிடையாது; ஏனெனில், அதிருப்தியடைந்தவர்களால் நாட்டிற்கு நன்மையைவிடத் தீமைதான் அதிகம்.

"உலகத்தின் வேறு பகுதிகளில் மனித வர்க்கத்திற்கு உதவுவதற்காக திறமைசாலிகளை நாம் அனுப்ப முடியும்; நம்முடைய நாட்டில் திறமைசாலிகளுக்குப் பஞ்சமில்லை."

--மொரார்ஜி தேசாய்

காஞ்சி புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம்

இரண்டு வாரங்களில் திறக்கப்படும்

காட்டாங்குளத்தூரில் சாதிக் பாட்சா தகவல்

செங்கற்பட்டு, டிச. 18—

காட்டாங்குளத்தூரில் ஊராட்சி ஒன்றியம் நந்திவரம் கிராமத்தில் ஆரம்பச் சுகாதார நிலையக் கட்டடத்துக்கு சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அடிக்கல் நாட்டினர்.

சுகாதார நிலையக் கட்டடம் ரூ. 1 இலட்சம் செலவில் கட்டப்படும்.

மருத்துவமனை கட்டுவதற்காக 5 ஏக்கர் நிலமும் ரூ. 14,000 நிதியும் அளிக்க முன்வந்த காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றிய மக்களை அமைச்சர் பாராட்டினர்.

குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரிவுடன் ஆரம்பச் சுகாதார நிலையம் நிறுவுவதற்காக ஒவ்வோர் ஒன்றியத்துக்கும் அரசு ரூ. 92,000 அளிக்கத் தீர்மானித்துள்ளது என்றும், இவ்வாண்டு இந்த மாவட்டத்தில் இரு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்படும் என்றும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் சேலம் மாவட்டத்திலும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பரீட்சார்த்தமாக பெண் டாக்டர்கள் நியமிக்கப்படுகின்றனர் என்றும் திரு. சாதிக் பாட்சா தெரிவித்தார்.

"பெண் டாக்டர்கள் முன்வந்தால் இம்மாவட்டத்தில் ஆரம்பச் சுகாதார நிலையங்களில் நிரந்தர அடிப்படையில் அவர்களை நியமிக்கவும் அரசு தயாராயுள்ளது'' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

காஞ்சியில் புற்றுநோய் ஆராய்ச்சி நிலையம் இன்னும் இரு வாரங்களில் திறக்கப்படும்."

சேமிப்பு என்ற பெயரால் மோசடி நடவடிக்கைகள்

போலி லாட்டரிகள் நடத்தும் ஏமாற்று வேலை

தடுக்கத் தமிழகக் காவல்துறை நடவடிக்கை

சென்னை, டிச. 18—

'சேமிப்புத் திட்டங்கள்' என்ற பெயரில் தோன்றியுள்ள அனுமதியில்லாத 'லாட்டரி'களுக்கு எதிராகப் போலீசார் விரைவில் நடவடிக்கை எடுக்கக்கூடும்.

பெருமளவுக்குத் தோன்றியுள்ள இந்தப் பரிசுத் திட்டங்களை ஏற்படுத்தியவர்கள் பல பேர், ஒரு ரூபாய் பரிசுச் சீட்டுகளை வெளியிட்டு, அவை குறிப்பிட்ட தேதியில் குலுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளனராம்.

"டிரான்சிஸ்டர்கள், கைக்கெடிகாரங்கள், வாயில் புடவைகள் போன்ற பல பரிசுகள், பரிசுபெறும் சீட்டுகளுக்கு அளிக்கப்படும்'' என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது; ஆனுல் விளம்பர அறிவிப்பில் விற்பனை செய்யப்படும் டிக்கெட்டுகள் எண்ணிக்கை காணப்படவில்லை.

"**இவையெல்லாம் அப்பாவி மக்களை ஏமாற்றிச் சிலர் பணக்காரர்கள் ஆவதற்கான சூழ்ச்சியேயாகும்**''

என்று அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

"அரசு அனுமதியின்றி யாரும் 'லாட்டரி' எதுவும் நடத்த முடியாது'' என்ருர் அவர்.

இதேபோல, 'சர்க்குலேஷன் கம்பெனிகள்' என்ற பெயரில் சிலவற்றை ஏற்படுத்திக்கொண்டு மணியார்டர்கள் பெறுகிருர்கள்; இதில் சேரும் சந்தாதாரர்கள், 5 டிக்கெட்டுகளை விற்க வேண்டுமாம்; ஒரு டிக்கெட் விலை ரூ. 2 எனக் கூறப்படுகிறது; 5 டிக்கெட்டுகளை விற்பவர்களுக்கு ரூ. 20 பெறுமான பொருள் தரப்படும் என்று சர்குலேஷன் நிறுவனத்தை ஏற்படுத்தியுள்ளவர்கள் விளம்பரத்தில் கூறியுள்ளனர்.

இந்த சர்க்குலேஷன் நிறுவனங்களை ஏற்படுத்தியுள்ளவர்கள், சென்னை நகரச் சுற்றுப் பகுதிகளையே விரும்புவதுபோலத் தோன்றுகிறது.

சந்தாதாரர்களுக்கு (டிக்கெட்டுகளை விற்றவர்களுக்கு) சேரவேண்டிய பொருள்கள் கொடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்ட புகார்கள்மீது பறங்கிமலை (செங்கற்பட்டு மாவட்ட) போலீசார் விசாரணை செய்துவருகிருர்கள்.

குடும்பக் கலைப் பட்டதாரிகளின் பொறுப்பு

அமைச்சர் சத்தியவாணிமுத்து யோசனை

கோவை, டிச. 17—

"குடும்பக் கலையில் பட்டம்பெற்றவர்கள் டாக்டர்களைப் போலவும், வழக்கறிஞர்களைப் போலவும் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்த முன்வர வேண்டும்.

"குடும்பக் கலைப் பட்டதாரிகள் தனிப்பட்ட முறையில் தொழில் நடத்த முன்வந்தால், நாட்டில் டாக்டர்கள், வழக்கறிஞர்கள் எண்ணிக்கை குறைந்துவிடும்.

"போதிய அளவில் குடும்பக் கலைப் பட்டதாரிகள் இருந்து, மக்களின் உணவுப் பஞ்சத்தை மாற்றுவதில் வெற்றி கண்டால், நாட்டில் உணவுப் பிரச்சினையே இராது."

இவ்வாறு, சமூக நலத்துறையமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்கள், இந்தியக் குடும்பக் கலைச் சங்கத்தின் 9-வது மாநாட்டைத் துவக்கி வைத்துப் பேசுகையில் சுட்டிக் காட்டித் தெரிவித்தார்.

தீயச் செயல்களை ஒழிக்கத் திட்டம்

பாக்தாத், டிச. 18—

தீயச் செயல்களை ஒடுக்குவதற்கு ஒரு வழியாகத் திருமணத்தை ஊக்குவிக்கும் திட்டமொன்றை ஈராக் அரசு பரிசிலனை செய்து வருகிறது.

திருமணம் செய்துகொள்ளாதவர்கள்மீது வரி விதிக்கவும், திருமணம் செய்துகொண்டவர்களுக்குப் பண உதவி அளிக்கவும் அத்திட்டத்தில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

"மணமகளுக்கு அளிக்கப்படும், 'வரதட்சணை'த் தொகை ரூ. 1,000-க்கு மேல் போகக் கூடாது'' என்றும் அத்திட்டத்தில் வரம்பு செய்யப்பட்டிருக்கிறது.

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

டிச. 19 காலை 10-மணி: உளுந்தூர்பேட்டை—வனத் துறை பயணர் விடுதித் திறப்பு விழாவும், பட்டா வழங்குதலும்; 10-30 மணி: தியாகதுர்க்கம் — பேரூராட்சி 70-வது ஆண்டு நிறைவு விழாவும்; அலுவலகக் கட்டிடத் திறப்பு விழாவும்; தியாகதுர்க்கம் ஊராட்சி ஒன்றியம் அலுவலகக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுதல்; விவசாயக் கிடங்குக் கண்காட்சித் திறப்பு விழாக்கள்; விவசாயிகளுக்குப் பம்பு செட்டு வழங்குதல்; பகல் 12-மணி: பல்லகச்சேரி—ஒன்றியப் பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; 12-30 மணி: வட தொரசலூர்—டேனிஷ் மிஷின் தொழுநோய் மருத்துவமனையில் புதிய வார்டு திறப்பு விழா; மாலை 4-மணி: மேலூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளித் திறப்பு விழா; 5-மணி: கள்ளக்குறிச்சி—கூட்டுறவு விற்பனைச் சங்க 50-வது ஆண்டு நிறைவு விழா; இரவு 8-மணி: நல்லாபாளையம்—தெருமின் விளக்கேற்றல்.

டிச. 20 காலை 10-மணி: கடலூர்—நில அளவலர்கள் மாநாடு (டவுன் ஆல்); மாலை 5-மணி: கடலூர் பழைய நகரத்தில் படகு பாலம் திறப்பு விழா; 6-மணி: கடலூர் குடும்பக் கட்டுப்பாட்டு வார விழா.

நாளுக்கொரு பள்ளி--தொழிற்சாலை!

கல்வி -- தொழிலமைச்சரின் பேரார்வம்!

"ஒவ்வொரு நாளும் ஒரு புதிய பள்ளி திறக்கப்படவேண்டும்; அல்லது அதற்கான அடிக்கல் நாட்டவேண்டும். நாள்தோறும் ஒரு புதிய தொழிற்சாலை ஏற்படவேண்டும்; அல்லது அதற்கான அனுமதியை வழங்கவேண்டும்.

"இப்படிப்பட்ட நாளைத்தான் நான் பயனுள்ள நாளாக -- விழுப்புண் ஏற்ற நாளாக -- வெற்றியெய்திய நாளாகக் கொள்வேன்; மற்ற நாட்களை விழுப்புண் பெருத வீணுளாகத்தான் கருதுவேன்."

—மதுரை மீனுட்சி சுந்தரேசுவர் மகளிர் உயர் நிலைப் பள்ளி அடிக்கல் நாட்டு விழாவில்

மக்களவையில் வில்லாளன் கடும் கண்டனம்

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யில் அவர்கள் உணர்ச்சிவயப் பட்டுவிடுகின்றனர்; இம்மாதிரி அவர்களை எரிச்சலூட்டுவதற்குப் பதிலாகப் பழைய நேரத்துக்கே திரும்ப வேண்டும்.

"இப்போதைய மாறுதல் அனுவசியமானது; அதை மாற்ற வேண்டும்."

அமைச்சர் ஷா:—"நாங்கள் ஒருவருக்கொருவர் இன்னொருவரை புரிந்துகொண்டிருப்பதால், தமிழக அரசுடன் நல்லுறவு நிலவுகிறது; என்னுடைய வாதங்களைக் கேட்ட பிறகு தமிழக அரசு அதைப் பாராட்டும் என நம்புகிறேன். எது சரியோ அது ஒப்பக்கொள்ளப்பட வேண்டும்."

ஆர். டி. பார்த்தசாரதி (காங்கிரசு):— "27 ஆண்டுகளாகக் குறிப்பாகத் தென்னாட்டு மக்கள் ஆங்கிலச் செய்தி அறிக்கைகளை காலை 8-மணிக்கும், இரவு 9-மணிக்கும் கேட்டு பழக்கப்பட்டிருக்கின்றனர். இதை மாற்றக் கூடாது. இந்திக்கு முதலிடம் அளிக்க அமைச்சர் விரும்பினால் அந்தச் செய்தி அறிக்கையை காலை 7-45 மணிக்கு ஒலிபரப்பலாம்."

அமைச்சர்:— "வடநாட்டவர்—தென்னாட்டவர் ஆகிய இரு சாராரின் பழக்கங்களுக்கும் சமமுக்கியத்துவம் அளிக்கப்படுகிறது; 'விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை' இருக்கவேண்டும்."

லோகநாத் மிஸ்ரா (சுதந்தரா):— "செய்தி நேர மாறுதல் தென்னாட்டில் கிளர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது; இப்படித்தான் தேசியஒருமைப்பாட்டுக்கு தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் உதவப் போகிறதா? குறிப்பிட்ட இந்தச் சமயத்தில் நேரத்தை அமைச்சர் மாற்றாமல் இருந்திருந்தால் தென்னாட்டில் இந்த அனாவசியமான தொல்லையைத் தவிர்த்திருக்க முடியும்; இப்போது இந்த மாறுதலுக்கு அவசியமே இல்லை."

அமைச்சர்:—"இம்மாதிரி செய்யும்போதெல்லாம், 'அது சரியல்ல' என்று நீங்கள் சொல்லுகிறீர்கள்; ஏனென்றால், இதை நீங்கள் அரசியல் நோக்கத்துக்காகப் பயன்படுத்திக் கொள்கிறீர்கள். 1968 சனவரியிலிருந்து இப்படி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நியாயமான இந்த மாறுதலுக்காக இந்த நேரத்தில் என்னைக் குறைகூற உறுப்பினர்கள் ஏன் முயன்று கொண்டிருக்கிறார்கள்?"

முல்கா கோவிந்த ரெட்டி:— "இந்தி பேசாத மாநிலங்களுடன் இதுபற்றி அமைச்சர் ஆலோசனை நடத்தினாரா? அவர்களுடைய கருத்து என்ன?"

அமைச்சர்:—"மாநில அமைச்சர்களுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் விவரங்களை நான் வெளியிடுவதற்கில்லை."

திருமதி யசோதா ரெட்டி:— "நேரத்தை மாற்றியது தந்திரமற்ற நடவடிக்கையாகும்; தென்னிந்திய மாணவர்கள் வடநாட்டில் உள்ளவர்களைவிட அதிகக் கட்டுப்பாட்டுடன் நடந்துகொண்டிருக்கின்றனர்; காலை 8 மணிக்கு இந்திச் செய்தி அறிக்கையை ஒலிபரப்பி மறைமுகமாக எரிச்சலூட்டுவது அனுவசியமாகும்."

அமைச்சர்:— "எரிச்சலூட்டுவது நேர மாறுதல் அல்ல; மக்களுடைய உணர்ச்சிகளை அரசியலுக்குப் பயன்படுத்திக்கொள்ளும் பழக்கம்தான் இந்த நிலைமைக்குக் காரணமாகும். 'ஆகாஷ்வாணி' என்ற பெயரை 'வானொலி' என்று மாற்றவேண்டும் என்ற கோரிக்கையை ஒப்புக்கொண்டதுதான், வடநாட்டில் விளைவை உண்டுபண்ணிவிட்டது."

திருமதி ரெட்டி:— "நிச்சயமாக சிறுபான்மையினர் கவனிக்கப்பட வேண்டும்."

அமைச்சர்:— "நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு அல்லது தெற்கு என்ற கண்ணோட்டத்திலிருந்து பார்க்காமல் நாடு முழுவதின் கண்ணோட்டத்திலிருந்து நோக்குவர் என்று நம்புகிறேன்."

இதோ ஒரு சமநோக்காளர்!

"வானொலியில் இந்திச் செய்தியை ஒலிபரப்பும் நேரத்தை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை எதுவும் வராமலேயே இந்த மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது; தமிழக அரசிடமிருந்து இதற்கு எதிர்ப்பு ஏதாவது வந்ததா? அதற்கு மத்திய அரசு அளித்த பதில் என்ன?"

என்று நாடாளுமன்ற மேலவையில், கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் கேட்டார்.

இதற்கு அமைச்சர் கே. கே. ஷா பதிலளிக்கையில் கூறியதாவது:—

"எனக்கு இந்தியா முழுவதும் சமமாகும். தென்னாட்டிலிருந்தோ, வடநாட்டிலிருந்தோ, கிழக்கிலிருந்தோ, மேற்கிலிருந்தோ கோரிக்கை வந்தால் அவை சமமாகப் பரிசீலிக்கப்படும். உறுப்பினருக்குத் தென்னாட்டிலிருந்து வரும் கோரிக்கைதான் முக்கியமாகத் தோன்றுகிறது; இதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது"

18 - 12 - 68 முதல்
25 - 12 - 68 வரை

கிறிஸ்த்மஸ் விசேஷ தள்ளுபடி 10%

எல்லா வித

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி ஆடைகளின் விற்பனையில்,

எங்களது எல்லா விற்பனை நிலையங்களிலும், பிரதம நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் கிடைக்கும்

அழகுக்கு அழகு செய்யும் கோ-ஆப்டெக்ஸ் புடவைகளை அணியுங்கள் மகிழ்ச்சியுறுங்கள்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாலசுந்தரம் பில்டிங்ஸ், எழும்பூர்; சென்னை 8

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதி

அறிஞர் அண்ணா சிகிச்சை நிதிக்காகத் தொகை அனுப்புமாறு கழகப் பொருளாளர் மு. கருணாநிதி அவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப நிதியளித்த தோழர்கள்:—

		ரூ. காசு
17-12-68 இதழ்த் தொடர்ச்சி		1,08,761.47
17-12-68 இதழ் வரவு விவரத்தில் மதுரை தோழர் வி. ஆர். சகநாதன் நண்பர்கள் அனுப்பிவைத்த தொகை மொத்தமாக ஒன்றும், விவரமான பட்டியல் ஒன்றுமாக இரண்டுமுறை தவறுதலாக வெளியாகிவிட்ட வகையில் அதிகத் தொகை		101.00
		1,08,660.47
தருமபுரி மாவட்ட தி. மு. க. செயலாளர் திரு. எச். எல். முருகேசன் அவர்கள் மூலம்:—		
திரு. எம்.ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்கள் கலந்துகொண்ட தருமபுரி சிறப்புக் கூட்டத்தில்	2,001.00	
தருமபுரி கூட்டத்தில் மேடையில் பல தோழர்கள்	47.00	
கிருஷ்ணகிரி சிறப்புக் கூட்டத்தில்	1,501.00	
மேடையிஸ் பல தோழர்கள்	82.74	
எம். கமலநாதன் எம்.பி.	505.00	
ஜெகதேவி -- தி. மு. க. கிளை	101.00	
ஓசூர் என். ரங்கசாமி	100.00	4,337.74
சென்னை தோழர் ஒருவர்		25.00
அலங்காநல்லூர் கூட்டத்தில் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம்		4.00
தம்மம்பட்டி தோழர்கள்		
கே. ரங்கசாமி	25.00	
ஒய். ஆர். கோபால்	25.00	
கே. நல்லமுத்து	15.00	
பி. எஸ். முத்துசாமி	10.00	
ஏ, விசயகுமார்	10.00	
சி. சாங்கமுத்து	10.00	
ஆ. பெரியசாமி	10.00	
டி. இராமசாமி	10.00	
எம். மொய்தீன் சாயபு	10.00	
ஏ. அப்துல் மஜீத், எம். இராமசாமி, எஸ். கே. அப்துல் காதர், டி. எம். இஸ்மாயில், கே. சுப்பிரமணியம், டி. வி. கோவிந்தசாமி, சீனிவாசன், ஏ. மருதமுத்து, என். இராமசாமி, எஸ். அங்கப்பன், எஸ். முத்துசாமி, கே. முத்து, டி.என். இராமசாமி ஆகிய 13 தோழர்கள் தலா ரூ. 5 வீதம்	65.00	
மற்றும் மூனுஸ், பழனியாண்டி, கரீம், ரசாக், ரங்கசாமி, முத்தையா, பரஞ்சோதி, வரதராசன், அப்துல்லா, பெரியசாமி, பரமசிவம் ஆகியோர்	20.00	210.00
கல்கத்தா-1 கே. எம். இப்ராகிம்		5.00
ஆக மொத்தம்		1,13,242.21

அண்ணா-மைசூர் முதல்வர் சந்திப்பு

நந்திமலையில் ஓய்வெடுக்க அழைப்பு

சென்னை, டிச. 18—

கருநாடக மாநில முதலமைச்சர் திரு. வீரேந்திர பட்டீல், இன்று காலை 9-30 மணியளவில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை, நுங்கம்பாக்கம் இல்லத்தில் சந்தித்து, உடல் நலம் விசாரித்தார்.

இருவரும் பொதுவாக பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் அரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தனர்.

திரு. பட்டீல் விடைபெற்றுக்கொண்டு செல்கையில், மைசூரில் உள்ள நந்திமலைக்கு வந்து ஓய்வெடுத்துக்கொள்ளுமாறு அண்ணா அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

பொதுக்கூட்டங்கள்

19--12--68

ஓடைப்பட்டி

தி. மு. க.—எம். ஜி. ஆர். மன்றம் ஆகியவை சார்பில் மாலை 7-30 மணிக்கு வானொலித் திடலில்; தலைவர்: சு. இராமு; பேசுவோர்: கேரள சுந்தரம், எஸ். வேலுச்சாமி, எம். இரத்தினம்.

சு. நாவலர்நம்பி நிகழ்ச்சிகள்

டிச. 19: சிதம்பரம்; 22: கரூர்; 29: பெரியகுளம்; 30: தேனி; 31: கந்தர்வகோட்டை.

சன. 16: ஆலடிக்குமுளை; 17: செயங்கொண்டம்.

செக் தூதுவர் சந்திப்பு

இந்தியாவில் உள்ள செக்கோஸ்லோவாக்கிய நாட்டுத் தூவர் திரு. ரிச்சர்டு டியோராக், நேற்று மாலை அண்ணா அவர்களைச் சந்தித்துப் பேசினார்.

குழுக் கூட்டம்

"திருச்சி 32-வது வட்ட தி மு.க. கிளையின் பொது உறுப்பினர் கூட்டம், 20—12—68 இரவு 9-மணிக்கு கழகக் கட்டிடத்தில் நடைபெறும்" என்று செயலாளர் இரா. பெருமாள் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.